“ஹைட்ரஜன்குண்டு” ஒரு ஏமாற்றுவித்தை!

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.
MALAIMANI
(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (23—5—50) வெளியீடு (24—5—50) [இதழ் 259

கம்யூனிஸ்டு நாடுகளை பயமுறுத்தக் கட்டிவிடப்பட்ட “புளுகுக் குண்டு”

ரஷியாவுக்குக் கிலி உண்டாக்க அமெரிக்காவின் ஆபாசவேலைகள்!

முயற்சி பலிக்காததால் ஒப்பந்தக் கோரிக்கை

ஹைட்ரஜன் அணுகுண்டு (நீர்வாய குண்டு)வின் அழிக்கும் சக்தியைப் பற்றி ஸ்கானிகர் காரியாலயங்கள் எவ்வளவு பிரசாரம் செய்யமுடியுமோ அவ்வளவு அதிகமாக செய்யவேண்டுமென்று அமெரிக்க அயல்நாட்டிலாகா உத்திரவு பிறப்பித்துள்ளதாம்! ரஷ்யாவையும் அதைச்சேர்ந்த நாடுகளையும் நிலை கலங்கச் செய்துவிடவேண்டுமென்பதே அமெரிக்காவின் நோக்கம். பீதி மேலிடுமானால் கம்யூனிஸ்டு நாடுகள் ஏகாதிபத்ய நாடுகளின் தாள் பணிந்து அமெரிக்கா சொல்படி அணுகுண்டு ஒப்பந்தம் செய்து கொள்ளுமென்பதாகும்.

ஏசுநாதர் கிறுஸ்து மதத்தைப் பரப்பியதுபோல நீர்வாயு குண்டுவைப் பற்றி அமெரிக்கச் செய்திக் காரியாலயங்கள் செய்தி பரப்பவேண்டுமாம்.

நீர்வாயு குண்டு—அணுக் குண்டுவைப்போல் ஆயிரமடங்கு நாசத்தை விளைவிக்கக்கூடிய குண்டு உற்பத்தி செய்வது அவ்வளவு எளிதானகாரியம் அல்லவென்று அமெரிக்க விஞ்ஞானிகளே அறிவித்துவிட்டார்கள். ஏற்கனவே ஏற்பட்டுள்ள குளிர் (பீதி) யுத்தத்தால் நீர்வாயு குண்டு செய்யப்படாவிட்டால்கூட செய்ய முடியும் என்ற கலவரம் மக்களிடையே ஏற்பட்டுள்ளது இக்குழப்ப நிலையையே அமெரிக்கா ரஷ்யாவை விரட்டப் பயன்படுத்திக்கொள்ள முயன்றுள்ளது

நீர்வாயு குண்டு திட்டம் ஏன் கைவிடப்பட்டது

யுத்தகாலத்தில் உபயோகிக்கும் ஆயுதமாக நீர்வாயுகுண்டு உற்பத்தி செய்தாலும் உபயோகிக்க முடியாதென்று கருதப்பட்டது. மற்றும் குண்டு போட்டு வெடித்தால் உண்டாகும் வெப்பம் சூரியனின் வெப்பத்தைவிட, அதாவது கோடிக்கணக்கான டிகிரி உஷ்ணத்தை உண்டாக்குவதால் குண்டுபோட்டவர்களையும் சேர்த்துப் பொசுக்கிவிடுமாம்.

மற்றும் விமானங்களில் நீர்வாயுகுண்டுவை எடுத்துச் செல்வது எளிதில்லையாம் சென்னை நகரின்மீது நீர்வாயு குண்டுவை எறியவேண்டுமானால் ஒருகப்பலில் கொண்டு வந்து துறைமுகத்தில்நிறுத்தி அதற்காக அமைக்கப்பட்ட விசையை முறுக்கவேண்டுமாம்! அவ்வளவுவரையில் இங்குள்ளவர்கள், என்ன பூப்பறித்துக்கொண்டா இருப்பார்கள்?

நீர்வாயு குண்டைப் பற்றிய போட்டியில் பெருந் தோல்வியடைந்துவிட்டதால் அணுசக்தியைப் பற்றி ரஷியவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப் பெரு முயற்சி செய்து வருகிறது இரண்டாண்டுகளுக்கு முன்பு அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்று அமெரிக்காவைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டது; ஆனால் இன்றுள்ள நிலைமை வேறு. அமெரிக்கா அணுகுண்டுக்கு அடுத்தபடியாக அதிக சக்தி வாய்ந்த குண்டைச் செய்ய முடியவில்லை யென்பதை ரஷியா அறிந்திருப்பதோடு, அணுகுண்டுவை ரஷியா திறம்படச் செய்து முடித்துவிட்டது. மேலும் அணுசக்தியை நாசவேலைக்கான குண்டுகள் செய்வதிலேயே ரஷியா முனைந்திருக்கவில்லை. சைபீரியா பாலைவனங்களை வளப்பமுள்ள[illegible]வும் மலைப்பிரதேசங்களை சமவெளிகளாகவும் பயன்படுத்தி வருகிறது.

மேலும் ஜெர்மன் விஞ்ஞானிகளுடன் சேர்ந்துழைத்து “சோலார்” அல்லது “மரணக் கதிர்” என்றொரு ஆயுதத்தைக் கண்டுபிடிக்க ரஷ்ய விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்கள். இந்த ஆயுதத்தைக் கொண்டு சூரியனில் உள்ள வெப்பத்தை அப்படியே பூமியின் ஒரு பகுதிமீது விழும்படிச் செய்ய இயலுமாம். இந்த வெப்பம் ஒரு கண்டத்தையே பொசுக்கி விடக்கூடுமாம்!

“மந்திரி சபை ஒரு சிறைக்கூடம்”

பிரதம மந்திரி நேரு கூறுகிறார்!

புதுடெல்லி, மே 21—

“சிலர் ஏன் மந்திரிகளாக இருக்க விரும்புகிறார்களென்று நான் பெரிதும் வியப்புறுகிறேன்; இதைவிடக் கடினமான வேலை வேறு இருக்கிறதா என்ற சந்தேகம் எனக்கேற்பட்டுள்ளது. மந்திரிசபை ஒரு சிறைக்கூடம், மந்திரி ஸ்தானம் முட்களாளான ஒரு படுக்கை” என்று இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித நேரு இங்கு பேசுகையில் கூறினார்.

மந்திரி சபையை விட்டு வெளியேறும் டாக்டர் ஜான் மத்தாய், தோழர் நெளலராம் ஆகியவர்களுக்கு அளித்த வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் பிரதம மந்திரி நேரு இவ்வாறு கூறினார்.

தாய்மொழி தமிழுக்கு ஆபத்து

—(0)—

கட்டாய இந்தி பற்றி ஆர்.கே.சண்முகனார் கருத்து

—(0)—

ஆனாலும் “திராவிடம்” என்ற சொல் பிடிக்கவில்லையாம்

‘பிரதேச மொழியை கட்டாயமாகப் பள்ளிகளில் இஷ்ட பாடமாக்கிச் சென்னை சர்க்கார் பிறப்பித்திருக்கும் உத்தரவு தமிழ் மொழி வளர்ச்சிக்கும் ஒன்றுபட்ட தமிழ் பண்பாட்டு வளர்ச்சிக்கும் விரோதமாக இருக்கிறது. சுயேச்சை நாடுகள் எல்லாவற்றிலும் பிரதேச மொழிக்கே முதலிடம் தரப்பட்டு கட்டாய பாடமாகப் பள்ளிகளில் வைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் தமிழ் மொழி மூலம் பள்ளி மாணவர் பயிற்றப்பட வேண்டுவது அத்தியாவசியமாகையால், சென்னை சர்க்கார் அந்த அடிப்படையில் பள்ளிகளின் பாட முறையை அமைக்க வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது” என்ற தீர்மானம் கோவையில் நடக்கும் தமிழ்த் திருவிழா மாநாட்டில் தோழர் ஆர். கே. சண்முகம் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

தோழர் ஆர். கே. சண்முகம் தீர்மானத்தைப்பற்றி பேசுகையில், கூறியதாவது:- வரவேற்புக் கழகத் தலைவர் தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ளது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். தமிழ்த்திருநாளில் இது போன்ற கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றுவது இல்லை என்றாலும் தமிழ் மொழிக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கும் போது மௌனமாக இருக்க முடியாது, கூடாது. மே மாதம் 2-ந் தேதி சென்னை சர்க்கார் பிறப்பித்திருக்கும் உத்தரவின்படி பிரதேச மொழியைக் கட்டாய பாடமாக்கப்படுவதற்குப் பதிலாக, ‘எந்த இந்திய மொழியாவது, அது இந்தியாய் இருந்தாலும் அல்லது தாய்மொழியாகவோ அல்லது பிரதேச மொழியாகவோ, இருந்தாலும், அல்லது பழைய மொழியாக இருந்தாலும், முதல் பாரத்திலிருந்து 6-வது பாரம் வரை, வாரத்துக்கு 6 மணி நேரம் (பீரியட்டுகள்) கற்க வேண்டும். இந்த உத்திரவின்படி இந்தியையும், ஆங்கிலத்தையுமே வளர்க்க வேண்டுமென்பது சர்க்கார் விருப்பம். இந்த உத்தரவின்படி இந்தியும் ஆங்கிலமும் கட்டாய பாடங்களாவதுடன் தாய் மொழித் தமிழைக் கற்க

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

இந்தியா-பிரிட்டன் வர்த்தகம்

லண்டன், மே 22—

இவ்வருஷ முதல் மூன்று மாதத்தில் இந்தியா பிரிட்டன் வர்த்தகம் சென்ற வருஷத்தில் இதே காலத்தில் இருந்ததைவிட மிகவும் குறைந்துவிட்டதென்பதை பிரிட்டிஷ் வர்த்தக போர்டு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா பிரிட்டனுக்கு இந்த முதல் 3 மாத காலத்தில் ரூ 31304403 மதிப்புள்ள பொருள்களை ஏற்றுமதி செய்திருக்கிறது. பிரிட்டன் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்தது,

ரூ. 28 18 66,442 மதிப்புள்ள பொருள்களாகும்.

தேயிலை, சணல், சம்பளம் முதலியவை இந்தியாவிலிருந்து இவ்வருஷம் குறைந்த அளவுக்கு பிரிட்டன் இறக்குமதி செய்திருக்கிறது.

கி.வ. பாககிஸ்தானிகள் இந்தியரைவிட நல்லநிலையில் உள்ளனர்

உணவும் உடையும் தாராளமாகக் கிடைக்கின்றன

டாக்கா “ஹிந்து நிருபர்” கூறுகிறார்

“கிழக்குப் பாக்கிஸ்தானினுள்ள பாக்கிஸதானிகள் இந்தியரைவிட மிக நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுடைய ஆடையணிகள் இந்திய உடைகளைவிட மேன்மையாக இருக்கிறது’ என்று டாக்காவிலிருந்து சென்னை தேசீய இதழ் “ஹிந்து” வின் பிரத்தியேக நிருபர் அறிவிக்கிறார்.

“இந்தியாவோடு ஏற்பட்ட வர்த்தக நெருக்கடியால் கிழக்கு வங்காளத்தில் தேவைப்படும் பொருள்கள் கிடைக்கவில்லை யென்று கூறுவது பொய் வதந்தியாகும், இன்று எங்கு கண்டாலும் அயல்நாட்டுச் சரக்குகள் ஏராளமாகக் கிடைக்கின்றன கடைகளில் செக்கோஸ்லாவாகிய தீப்பெட்டிகளும், பிரிட்டிஷ் ஜவுளிகளும், தாராளமாக நியாயமான விலைக்குக் கிடைக்கிறது. இந்தியாவில் உற்பத்திசெய்யப்படும் பொருள்கள் பாக்கிஸ்தானில் விற்பனைக்கு இல்லையென்றே கூறலாம்” என்று அவர் அறிவிக்கிறார்.

‘இந்தியாவின் ஆதரவு கிடைக்காவிட்டால் பாக்கிஸ்தான் அழிந்தே போகும், உடுக்க உடையும், உபயோகிக்கும் பொருள்களும் இந்தியாவிலிருந்து கிடைக்காவிட்டால் பல தொல்லைகளுக்கு ஆளாகுமென்று நம் தேசீயவாதிகள், நாட்டைப் பிரிவினை செய்யக்கூடாதென்று கூறிய காங்கிரஸ் காரர்கள் இன்றும் கூறுகிறார்கள். வீண் பிரசாரம் என்று நாம் கூறிவந்தோம். டாலரைச் சம்பாதித்துக்கொடுக்கக்கூடிய சணலும், தேயிலையும் பாக்கிஸ்தானிடம் இருக்கிறது அவர்களுக்கு வேண்டும் பொருள்கள் அந்நியநாடுகளிடமிருந்து எளிதில் கிடைக்குமென்று நாம் சொன்னதெல்லாம் வெட்டிப் பேச்சு என்று கூறி எள்ளிநகையாடினார்கள். ஆனால் இன்று “ஹிந்து” நிருபர் அறிவிக்கிறார் பாக்கிஸ்தானில் பட்டினி, கிடையாதென்று ஆடையின்றி மக்கள் வாடையால் மெலியவில்லை யென்று இந்தியா இழந்த வர்த்தகத்தை அயல்நாடுகள் கைப்பற்றிக்கொண்டு இந்தியாவை “நடுத்தெரு நாராயண” ஆக்கிவிட்டதென்று.

மாலை மணி

சென்னை 23—5—50 செவ்வாய்க்கிழமை

முழங்கும் முத்தமிழ்!

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று, வெற்றிச் சங்கம் சொண்டு வீர முழக்கமிட, வீரத்தமிழர்கள் வீறுபெற்று எழுந்துவிட்டனர் - கொங்கு நாட்டின் தலைநகரான் கோவையம்பதி நோக்கிப் புறப்பட்டும் விட்டனர்!

வெள்ளம்போல் தமிழர்கள் மலை நாட்டின் மாநகரிலே கூடுகின்றனர்! மாநாடு கூடுகின்றனர்!

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு! கொப்புத் தேன் பாயும் கொங்கு நாட்டின் மணிமுடி என விளங்கும் கோவை மாநகரிலே கூடுகிறது!

மே திங்கள் 27, 28 சனி, ஞாயிறு! அந்த நாட்களில் தான் முத்தமிழ் கோலம் கொள்ளும் கண்கொள்ளாக் காட்சியைக் கோவைமாநகர் கண்டு களிக்கப்போகிறது!

தமிழ்வல்ல பாவாணரும்—இசைவாணரும்—ஆடல் வல்லுநரும்—பாடற்புனை வோரும்—நாடகம் நடத்திடுவோரும்—அறிஞர் பெருமக்களும்—புலவர் பெருந்தகையரும் முத்தமிழ் வளர்ச்சிக்கான வழிவகுக்க மாநாடு கூடுகின்றனர் என்னும்போது, இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே!

வீழ்ச்சியுறு தமிழகத்துக்கு எழுச்சியூட்டவும், வசை பொடிந்த தமிழர்க்கு வன்மை யூட்டவும், சூழ்ச்சிதனை, வஞ்சகத்தைச் சுட்டெரிக்கவும், பொறாமைதன்னைப் பொசுக்கித் தள்ளவும், காழ்ச்சிந்தை மறச் செயல்களை மிகவும் புரியவும், கடல்போல் செந்தமிழைப் பெருக்கிடவும் முத்தமிழ் வளர்ச்சி மாநாடு கூடுகிறது! எனவேதான், "செந்தமிழ் நாடென்னும் இப் பழந் தமிழ் நாட்டின் வீரர்களே, வீராங்கனையர்களே கோவைநோக்கிப் புறப்படுவீர்—தமிழைக்கொல்லும் தீமைகளைத் தீய்த்திடுவீர்-கடமையை ஆற்றிக் களிப் படைவீர்!" என்று உயர் குரலெழுப்பி நிற்கிறோம் நாம்!

மாநாட்டிற்குத் தமிழகத்தின் தன்னேரில்லாத் தனிப் பெரும் புரட்சிக்கவிஞரான பாரதிதாசன் அவர்கள் தலைமைதாங்குகிறார்கள் என்றால், மாநாட்டின் சிறப்பு எத்துணை அளவு உயர்ந்தோங்கி விளங்கும் என்பதை எளிதில் ஊகித்தறிந்து கொள்ளலாகும்.

தமிழக மக்கள் அனைவரின் ஒருமித்த ஆதரவுடன் பொன்னாடை போர்த்தப்பெற்று, பொற்கிழி வழங்கப்பட்ட ஒரு பெரும் புலவரான்றுத் திகழ்பவர் ஆவார் புரட்சிக்கவிஞர். அவர் புரட்சிக் கருத்துக்களின் சின்னம்! நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்தவர்; பொன்மொழிக்குப் புதுமை ஏற்றியவர் தமிழைப் பற்றிப் பாழ்படுத்திக் கிடந்த நச்சுப் புகைப்படலத்தை யெல்லாம் எழுதுகோல் முனையால் தூள் தூளாக்கியவர். நூறாண்டு

நூறாண்டு காலமாகத் தமிழோடு கடவுள் வெறியையும், சமயவெறியையும் புகுத்தி, தமிழின் எழில் நலத்தைப் போக்கித், தமிழை வாழ்வுக்கு உதவாத வகையற்ற மொழியாக ஆக்கிடும் முயற்சியில் ஈடுபட்ட பிற்போக்கினரை எதிர்த்து நின்று, பாடல்களிலே புதுப்பாங்கும், புதுக் கருத்தும் பல்பொருளின் நல் அழகும் உயர்வும் விந்த நாடு பெறும்படியாகச் செய்த உயர்பெருங் கவிஞர் ஆவார் அவர். ஈடும் எடுப்பும் வைத்துக் காணமுடியாத அளவுக்குச் சிறந்து விளங்கும் நமது புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பொன்னாடை போர்த்தித் தலைமை தாங்கி நின்று பொன்மொழிகளைக் கொட்ட போகிறார் மாநாட்டில், என்ற காட்சியை எண்ணிப் பார்க்கும் போது மட்டிலா மகிழ்ச்சி ஏற்படுகிறது—யாவர் உள்ளத்திலும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை!

மாநாட்டைத் திறந்துவைக்க நாவீறு படைத்த நாவலர் ச.சோமசுந்தர பாரதியார் அவர்கள் இசைந்திருப்பது, மாநாட்டிற்குத் தனிச் சிறப்பு நல்குவதோர் நிகழ்ச்சியாகும். ஒப்பு காப்பெறும் புகழ்த் தொல்காப்பியத்தை, மாசு போக்கி மக்கள் மன்றத்தின்முன், அதன் புகழொளியோடு கொண்டு வந்துநிறுத்திய பெருமை தனைத் தூய நாவலர் பாரதியார் அவர்களையே சார்ந்ததாகும். இடைக் காலங்களில் வஞ்சக ஆரிய இனப் பற்றுடையோர், தொல்காப்பியத்திற்கு மாசு கற்பித்து அதனை மங்கவைக்கும் பணியினைத் திறம்பட செய்து வந்ததால், தமிழ் நன்மக்கள் தொல்காப்பியத்தின் தனிச்சிறப்பை இதுவரும் உணர முடியாமலே இருந்து வந்தது. தொல்காப்பியத்திற்குப் பாரதியார் அவர்கள் எழுதியுள்ள உரை, வஞ்சகர்களால் வீசப்பட்ட மூடுபனியைக் கிழித்து, உண்மை உயரிய பொருளைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது அப்பேர்ப்பட்ட அருந் தமிழ் ஆற்றல் வாய்ந்த நாவலர் முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டைத் திறந்து வைப்பதானது எல்லா வகையிலும் பொருத்தமுடைய செயலாகும்.

மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் பாரதிதாசனும் சரி, மாநாட்டைத்திறந்து வைக்கும் பாரதியாரும் சரி, இருவரும் கோழைகளல்லர், மறக்குடித் தமிழர் தாம் என்று காட்டிடும் வீரர்களாவார்கள். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் பண்பினை அவரிருவர்பாலும் காண முடியாது; உள்ளத்திற்பட்டதைப் பட்டபடியே பகரும் உயர் பண்பினர்! தமிழகத்தின் தலை சிறந்த புலவர் ஏறுகள் இரு வரும் கலந்து அரும்பணி யாற்றும் முத்தமிழ் வளர்ச்சி மாநாடு எல்லாவகையிலும் சிறப்புற்றே விளங்கும் என்பது திண்ணம்.

இவர்களேயன்றி நல்லிசைப் புலவர்களும், நாவீறுபடைத்த சொற்பொழிவாளர்களும் அரும் பெரும் கருத்துக்களை மாநாட்டில் அள்ளிவீச பெருமகிழ்வுடன் முன்வந்துள்ளனர்.

தமிழைத் தம்உயிரெனநினைப் பவரும், அதன் உயர்வு எனக் கருதுவோருமே மாநாட்டில் பங்கு கொள்ளுகின்றனர். நாவால் தமிழுக்கு உயர்வு பேசி, மனத்தால் தமிழுக்கு உலைவைக்கும் வன்னெஞ்சர்கள் யாரையும் இதில் காணமுடியாது; அத்தகையோர் போலிப்பற்றுடையார் மாநாட்டிலேதான் இடம் பெறுகின்றனர். தமிழைப் போற்றிக் காத்து வளர்க்கும் பண்புடையோரே மாநாட்டில் கூடுகின்றனர். அத்தகையோரைத்தான் வருக, வருக எனக் கோவைமாநாடு அழைக்கிறது.

முத்தமிழின் உருவங்களான இயல், இசை, கூத்து மூன்றும் மாநாட்டில் முழங்குகின்றன இயற்றமிழ் வளர்ச்சியைப் பற்றிப்பேச இயற்றமிழ் அறிஞர்களான ஔவை சு. துரைசாமி, அறிஞர் கா. அப்பாதுரை, புலவர் வெள்ளைவாரணனார், இராம மீனாட்சிசுந்தரனார், புலவர் சுந்தரராசன், புலவர் நன்னன் ஆகியோரும் தமிழின் எதிர்கால ஆக்க வளர்ச்சி பற்றிப்பேச கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்வது சிந்தனைக்குச் சிறந்த விருந்து தருவதாகும்.

வியலோடு இயைந்து வரும் தமிழிசையை இசைத்துக் காட்ட, மாநாட்டில் இசையரங்குகள் ஏற்பாடாயிருக்கின்றன இன்னிசை விருந்தினை அளிக்க இசைவாணர்களான சி. எஸ். ஜெயராமன், டி. வி. நமசிவாயம், இராச மாணிக்க பாகவதர் ஆகியோர் அன்புடன் இசைந்துள்ளார்கள்.

இயல், இசை, இவையிரண்டோடும் இணைந்துவரும் கூத்து அரங்கத்தில், "சந்திரமோகன்" "நீதிதேவன் மயக்கம்" என்ற இரு நாடகங்கள் நடைபெறவிருக்கின்றன. முதல் நாடகம் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த கற்பனை நாடகம் ஆகும்; இரண்டாவது இலக்கியக் கதையை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததாகும். நாடகங்களிலே இன்தமிழ் கொழிக்கக் காணலாம்!

"வள்ளுவர் பந்தலில்" மாநாடு நடைபெறுவதற்கேற்ப வள்ளுவர் வரலாற்றை வில்லுப்பாட்டால் இசைத்துக்காட்ட நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன், ஒப்பியுள்ளார் மகிழ்ச்சிவெள்ளப் பெருக்குதான்!

இவ்வாறாக முத்தமிழின் முழங்கோசையை எத்திசையும் செலுத்த, முத்தமிழ் வளர்ச்சி மாநாடு கூடுகிறது கோவையில்! தமிழகத்தின் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால்பொறிக்கப்படவேண்டிய நாட்களாக இருக்கும் 1950 மே 27, 28, நாட்கள் "இலக்கியமா மன்றத்தை" நிறுவும் அரும்பெரும் முயற்சியும் மாநாட்டில் எடுக்கப் பட்டிருப்பதால், மாநாடு வரலாற்றுச் சிறப்புடையதொன்றாகும் என்பதைத் தெள்ளத்தெளிய உணரலாம்.

இலக்கியப் புலமையுடையோர் "இலக்கிய மாமன்றத்தில்" பங்கு கொள்ளவாரீர்! பாவாணர்களே, இசைவாணர்களே, ஆடல்வல்லாரே, பாடல் வல்லாரே, நடிகர்களே, நல்லறிஞர்களே, வீரர்களே, வீராங்கனையரே போவோம் வாரீர் கோவைக்கு" என்று பெருமிதத்தோடு கூவியழைக்கிறோம்! பதிலைச் செயலில் காட்டுக!

முழங்குக முத்தமிழ்!

அணுசக்தியின் முழுப்பலனைக் காண 50-ஆண்டுகள் பிடிக்கும்

அணுசக்திக் கமிஷன் ஆலோசகர் கருத்து

நியூயார்க், மே 22—

மின்சார சக்தி நமக்கு இப்பொழுது உபயோகப்படுவது போல அணுசக்தியும் உபயோகத்திற்கு வர இன்னும் சுமார் 50 ஆண்டுகளாவது பிடிக்கும். அதுகூட உள்ள உரேனியத்தை அடுத்த சில ஆண்டுகளுக்குள் செலவிடாமல் வைத்திருந்தால்தான் சாத்தியம் என்று அணுசக்தி கமிஷன் ஆலோசகரும், காலிபோர்னியா டெக்னலஜி இன்ஸ்டிடியூட் தலைவருமான டாக்டர் லீ. ஏ. டுபிரிஜ் 'ஆடாம்ஸ் அட ஓர்க்' என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அணுசக்தியைக் கொண்டு முதலில் சப்மரின்களை ஓட்டலாம் என்றும் அடுத்த பத்து ஆண்டுகளில் 4 அல்லது 5 கப்பல்களை அணுசக்தியால் ஓட்டச் செய்யலாம் என்றும் அவர் கூறுகிறார். (குளோப)

இலக்கிய மா மன்றம்

இலக்கிய மா மன்றத்தின் அமைப்புக் கூட்டம் கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டின்போது நடைபெறும்.

கூட்டம் நடைபெறும் இடமும், காலமும் மாநாட்டில் முன்னறிவிப்புச் செய்யப்படும்.

மா மன்றத்தின் உறுப்பினராக, [illegible] தெரிவித்தும் பெயர்கொடுக்கோரே அமைப்புக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

"இலக்கிய மா மன்றத்தின்" நோக்கம், கொள்கை, செயல் திட்டம், விதிமுறைகள் ஆகியவைகள் அமைப்புக் கூட்டத்தில் முடிவுசெய்யப்படும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், நாவலர் பாரதியார், மற்றப் புலவர்கள் ஆகியோர் வழிகாட்டுவோராக இருந்து மன்றத்தின் அமைப்பு முறை பற்றி அறிவுரை பகர்வர்.

இதுகாறும் பெயர் கொடுத்தோரும், இனிப் பெயர் கொடுக்க இருப்போரும் அமைப்புக்கூட்டத்தில்கலந்து கொண்டு மன்றத்திற்கு ஆக்கந்தர வேண்டுகிறேன்.

இரா. நெடுஞ்செழியன்
அமைப்பாளன்

கொழும்பு பஸ் தொழிலாளர்

வேலை நிறுத்தம் செய்வரா?

கொழும்பு, மே, 20—

கொழும்பு சுற்றுப்புறத்திலுள்ள பஸ் சர்வீஸ்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் பஸ் முதலாளிகட்கும் அபிப்பிராயபேதம் முற்றிவருவதாகவும், அதன்காரணமாக வேலைநிறுத்தம் ஏற்படக்கூடுமெனவும் தெரிகிறது.

தொழிற்சங்க வாதிகளை காரணங்காட்டி முதலாளிகள் வேலையினின்று நீக்கியதே இதற்கு காரணமாம்.

தாய் மொழி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலே ஒருவன் தட்டிக்கழித்து விடலாம்.

அந்நியர் ஆட்சியில் தாய் மொழிக்குக் கேடு ஏற்பட்ட காரணத்தால் தமிழ் இரண்டாவது மொழியாயிற்று. இன்றைய சர்க்காரின் உத்தரவால் அது இன்னும் கேவலப் படுத்தப்படுகிறது.

"சமீபத்தில் தோழர் சர்கார் பட்டேல் கொச்சியில் பேசுகையில் அடுத்த 15 ஆண்டுகளுக்குள் தென் இந்தியர் இந்தியைக் கற்றுக்கொள்ளாவிட்டால் நாட்டு நிர்வாகத்தில் பின்தங்க வேண்டி வந்துவிடுமென்று எச்சரித்திருக்கிறார். இதனால் இந்தித்தே அதிகக் கவனம் செலுத்த முற்படுகிறவர் மக்கள்.

"தமிழகத்தின் ஒரு பகுதியாக முன்பிருந்த கேரளத்தைச் சேர்ந்த கல்வி மந்திரி மாதவனார் இதுபோன்ற உத்தரவை எப்படித் துணிந்து பிறப்பித்தாரென்பதே வியப்பைத் தருகிறது. தமிழுக்கு ஏற்பட்ட கதிதான் மற்ற தென்னிந்திய மொழிகளுக்கும் ஏற்படும்.

"பத்தாண்டுகளுக்கு முன் இந்தி கட்டாய பாடமாகத் திணிக்கப்பட்டது, மக்களில் ஒரு பகுதியினர் அதைப் பலமாக எதிர்த்தார்கள். தமிழ் நசுக்கப்பட்டு அதன் வளர்ச்சி, அந்நிய மொழியின் கட்டாயத்தால் பெரிதும் சீர்கெட்டுவிடுமென்று அவர்கள் கூறினார்கள். அவர்கள் சொன்ட பயம் உண்மையாகிவிட்டதென்றுதான் கூறவேண்டியுள்ளது. இலக்கியமும் இலக்கணமும் மிளிரும் தமிழ் மொழியை இந்தியுடன் தமிழர் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்களுக்கு இந்தியைப் பற்றி ஏளனம்தான் ஏற்படும் இந்தி சமீபத்தில் தோன்றியதொரு மொழி; அதற்கு இலக்கண வரம்பு கூடக் கிடையாது அது போன்றதொரு கேவலமான மொழி முதலிடம் பெறுவதைத் தமிழர் என்றும் ஆதரிக்கமாட்டார்கள்" என்று கூறினார்.

'திராவிடம்'' என்ற சொல்லே பிடிக்கவில்லையாம்!

நல்ல தமிழர் போன்று பேசிவந்த தோழர் ஷண்முகம் செட்டியார் ஒன்று கூறினார் ஆரியர்கள் உள்ளம் குளிர! வேதங்கள்ஸ்மிருதிகள் ஆகியவற்றில் 'திராவிடம்'' என்ற பதம இல்லை, அதனால் எனக்கு அப்பதம் பிடிக்கவில்லை''

ஏஜண்டு தேவை

திருச்சியில் நமது "மாலை மணி" யை விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்புள்ள ஏஜண்டு தேவை!

நிர்வாகி,
'மாலைமணி''

காணைபேட்டி:

"ஹனுமான்" அல்லது சர்க்கார் நோயாளி

"சார் அனுமானைப் பேட்டி காண வேண்டும்," என்று கூறி விட்டுதலையைச் சொரிந்தேன். ஏதோ எழுதிக்கொண்டிருந்த ஆசிரியர் மூக்குக்கண்ணாடியைச் சரிசெய்துகொண்டு "என்ன?" என்று கேட்டார்.

ஹனுமானைப் பேட்டிகாண வேண்டும்; விற்றுவிடப்போகிறார்களாம் பத்திரிகையில் விளம்பரம்போட்டிருக்கிறது."

ஓ, அந்த விமானத்தை கூறுகிறாயா, சரி இந்தா சீட்டு பெங்களூருக்கு ரயில் கட்டணம் வாங்கிக்கொள்"

"இல்லை சார்......"

"வேறு என்ன?"

அனுமான் சர்க்கார் வாகனம், ரயிலில் வந்தேன் என்று தெரிந்தால் பேட்டி கூட அளிக்கமாட்டான்"

"என்ன செய்யச் சொல்லுகிறாய்?"

"விமானத்தில் நேராக அவன் இருக்குமிடத்தில் சென்று இறங்கலாமென்று உத்தேசம்......"

"நம்முடைய பத்திரிகையின் பணத்துக்கு அது அதிகச் செலவாச்சேப்பா,...... சரி வேண்டிய பணம் வாங்கிக்கொண்டு போ.........

ஜக்கூர் விமான நிலயத்தில் ஹனுமான் கண்ணுக்குப் படும்படிதான் நான் பிரயாணம் செய்த விமானம் இறங்கியது. என்னுடன் வந்தவர்கள் அனுமானைத் தட்டிப் பார்வையிட்டார்கள். அவர்கள் செல்லும் மட்டும் அனுமான் கண்மூடிக் கொண்டு சோகமாகக்கிடந்தான். பின்பு நான் மெள்ளக் கூப்பிட்டேன் "அப்பா, அனுமான்......நான் உன்னை விலைக்கு வாங்க வரவில்லை; பேட்டிகாண வந்தேன்; உன் குறைகளைக் கொஞ்சம் தாராளமாக என்னிடம் சொன்னால் உனக்கு விமோசனம் உண்டு"

புன்னகை தவழ்ந்தது அனுமான்முகத்தில்; மந்திரிகளைக் கூட நிருபர்கள் மதிக்கமாட்டார்களே, நம்மையும் தேடி ஒருவன் வந்திருக்கிறானே என்ற மகிழ்ச்சி போலும்!

'சரி நீங்க என்ன தெரிந்துகொள்ளவேண்டும்'' "உனக்கு அனுமான் என்று ஏனப்பா பெயர் வைத்தார்கள்?

"அது எனக்கென்னங்க தெரியும். ஒன்றுதாராளரைப் போய்க் கேளுங்கள்"

"ஆமாம், அவர் முருகன் பக்தி நிறைந்தவராயிற்றே உனக்கு 'மயில்' என்றல்லவா பெயர் சூட்டியிருக்கவேண்டும்; அதற்காகத்தான் கேட்டேன் சரி, எனக்கு முன் வந்தவர்கள் என்ன செய்தார்கள்"

'தட்டித்தட்டிப் பார்த்தார்கள்; மொத்தம் எவ்வளவு அலுமினியம் என் உடம்பிலிருக்கிறதென்று என்பக்கத்தில் நின்ற ஆளைக் கேட்டார்கள்; எனக்கு அப்பொழுது உடம்பு வெலவெலத்துப் போய்விட்டது. சில நாளாக உடம்பு வேறு சரியாக இல்லை."

"யாராவது உன்மேல் உட்கார்ந்துகொண்டு சவாரி விட்டார்களா?

"இல்லை"

"ஒருவர் கூட சவாரிவிட்டுப் பார்க்கவில்லையா?...... ஓஹோ, உனக்கு உடம்பு சரியில்லையென்றுதான் அவர்களுக்குத் தெரியுமே... அதைத்தான் பத்திரிகைகள் ஓயாமல் பிரசுரித்துக் கொண்டிருக்கின்றனவே... அதுசரி, உனக்காக இதுவரை மைசூர் 'டாக்டர்'களுக்குக் கொடுத்த பணம் எவ்வளவு இருக்கும்''?

"ஏராளமாக ஆகியிருக்கும் சர்க்கார் பணம்தானே, என்று தாராளமாகப் 'பில்' போடுகிறார்கள்.

அதுவுமில்லாமல் மைசூர் சர்க்கார் வேறு நான் இங்கிருப்பதற்காக மாதா மாதம் 5000 வாங்கிவிடுகிறார்கள்."

'சரி, இவ்வளவு பணம் உனக்காகச் செலவு செய்கிறார்களே, உன்னால் இதுவரையில் சென்னை சர்க்காருக்குக் கிடைத்த ஆதாயம் எவ்வளவு இருக்கும்.

"அதிகமாக ஒன்றும் இருக்காது ஓமந்தூரார் ஒருமுறையோ இருமுறையோ டில்லிக்கு போய்வர உபயோகப்பட்டேன்; அதுவும் ஒரு முறை [illegible] கீழ இறங்கிவிட்டேன்; அப்பொழுது எனக்கு லேசாகக் காயம் கூட ஏற்பட்டது..........மற்றொரு முறை மராமத்து மந்திரியார் திருவனந்தபுரம் செல்லும்போது உபயோகித்தார்; அவ்வளவுதான் மற்றவையெல்லாம் சில்லரைப் பிரயாணங்கள்"

அவசிய மேற்பட்ட போதெல்லம் தயாராக இருந்தாயா?"

"இல்லை, நான்தான் அடிக்கடி வியாதியால் பீடிக்கப்பட்டுவந்தேன் என்று கூறினேனே."

"உன்னால்தான் சர்க்காருக்குப் பலன் கிட்டவில்லையே விற்றுவிடுகிறார்களே என்று ஏன் கவலைப்படுகிறாய்; மக்கள் வரிப் பணமாயிற்றே உனக்காக வீணாகச் செலவுசெய்து கொண்டிருப்பது நியாயமா? பட்டவர்த்தனமாகக் கூறுவதால் வருத்தப்படவேண்டாம்; உண்மை உரைக்கின்றேன்."

'விற்றுவிடுவதைப் பற்றி வருந்தவில்லை; பாதிக்குப் பாதி விலையாக விற்றுவிடுவதாக ஏன் விளம்பரம் போடவேண்டும்? வாங்கிய விலைக்கு விற்றுவிடுகிறோம் என்று விளம்பரம் போட்டிருந்தால் கூடப் பல முதலாளிகள் சர்க்காரின் சலுகைகளைப் பெற வாங்கிக் கொண்டிருப்பார்களே; வாங்கி சர்க்காரிடமிருந்து வாங்கிய விமானமென்று பெருமை பேசிக்கொள்வதற்காக 'ராஜபோகத்தில்' வைத்து சீராட்டிப் பாராட்டி இருப்பார்களே... இந்தச் சிறிய உதவியை எனக்குச் செய்திருக்கக்கூடாதா?'

"இப்பொழுது என்ன கெட்டுவிட்டது?"

"விலை குறைந்த விளம்பரப்படுத்தியிருப்பதால் வாங்குவதே கேவலம் என்றுதான் பலர் நினைப்பார்களே; ஒருதரம் கூடப் பலனிவர உபயோகிக்கப்படாதென்றுதானே ஐயா அவர்கள் முடிவு செய்திருக்க வேண்டும், இல்லாவிட்டால் ஒருவராவது வந்து ஓட்டிப் பார்க்கவேண்டுமென்று கேட்கவில்லையே!

"ஐயோ பாவம்; அதனால் தான் வருந்துகிறாயா?"

"அதுமட்டுமல்ல ஐயா. சென்னை "காயலாங்கடைக்காரர்கள்" என்னை ஓயாமல் வந்து பார்வையிடுகிறார்களே; உடைத்து விற்கவேண்டுமென்பதல்லவா அவர்கள் எண்ணம். ராஜபோகத்தில் வாழ்ந்த நான் இவ்வளவு கேவலமாக்கப்படுவது நீதியா......நீங்களே கூறுங்கள்.

"வருத்தப்படாதே அப்பா; விளம்பரமோ செய்தாகிவிட்டது; இனி நடப்பது நடந்துதான் ஆகவேண்டும்; நானோ ஒரு சாதாரணப் பத்திரிகையின் நிருபர்; எனக்கு வரும் போது விமானப் பயணச் செலவு கொடுக்கவே என் பத்திரிகை ஆசிரியர் வருத்தப்பட்டார்; ஆகையால் உன்னை விலைக்கு வாங்கி ஆதரிப்பதென்பது எங்களால் ஆகாத காரியம்; வேண்டுமென்றால் தெரிந்தவர்களிடம் வேண்டுமானால் உன்னைப்பற்றிக்கூற முயலகிறேன்" என்று கூறி ஹனுமானை ஒருவாறு தேற்றிவிட்டு, விட்டால் போதுமென்று ஓடிவந்துவிட்டேன்.

—"ஆனந்தன்"

விஷமத்தனமாம்

லண்டன், மே 22—

'30 ரஷ்ய கப்பல்களுக்கு பிரிட்டிஷ் சாகரங்களில் என்ன வேலை?' என்பது பற்றி பலவித ஹேஷ்யங்கள் 'அபிப்பிராயங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஏதோ கெட்ட எண்ணத்தின் பேரிலேதான் ரஷ்யக் கப்பல்கள் வந்திருக்க வேண்டும் என்று முன்பு மாஸ்கோவுக்கு சென்ற பிரிட்டிஷ் ராணுவத் தூதுகோஷ்டித் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் லங்க்போர்ட்மார்டெல் கூறினார்

மீன் பிடிப்பவர்கள் இப்படி ஒழுங்காக கப்பல்களை அணிவகுத்து நடத்த மாட்டார்கள் என்றும் ஏதோ ஒரு திட்டம் போட்டே இது நடக்க வேண்டும் என்றுதான் எண்ணுவதாகவும் அவர் கூறினார்

ரஷ்யாவில் பிரிட்டிஷ் இராணுவ இலாகா அதிகாரியாக இருந்தவரும், யோக நிபுணருமான ஸர் வால்ட்ரூக்ஸ் கூறுகையில் ரஷ்யாவின் இச்செயல் விஷமத்தனமானது என்றும் கெடுபிடி போரை இன்னும் உச்சநிலை அடையச் செய்யவே இம்முயற்சி என்றும் கூறினார்.

இது மிரட்டல் போரில் புது கட்டம் என்றும் ஹேஷ்யம் நிச்சயமின்மை இவைகளை கிளப்பிவிட ரஷ்யர்கள் இக்காரியத்தை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று அயல்நாட்டு மந்திரி லார்ட் வான் ஸிட்டார்ட கூறினார்

இதில் கெட்ட எண்ணம் ஏதும் இருப்பதாக தனக்குத்தெரியவில்லை என்று கடற்படைத்தலைவர் லார்ட் கன்னிங்ஹாம் கூறினார்.

காமா [illegible]ன் பெண் குழந்தை

பிறந்ததும் மழை பெய்ததாம்!

லண்டன், மே 22—

காமாவுக்கும் அவருடைய வெள்ளை மனைவிக்கும் பெண் குழந்தை பிறந்ததும் மழை அடித்துக் கொட்டியதாம். பஞ்சத்தினால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த பாமங்வாடோ ஜாதியினர் இக்குழந்தையை ஒரு வரப்பிரசாதம் எனவே கருதி அன்பு செலுத்துகின்றனராம்.

காமா தன் சட்ட பரீட்சை படிப்பை முடித்து தன் வழக்கை தானே கோர்ட்டுகளில் வாதிக்க உத்தேசித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

செஞ்சீனவை எகிப்து அங்கீகரிக்கும்?

செஞ்சீனவை எகிப்து அங்கீகரித்துவிடும் என்று டிரிசெவ்லே கூறியதாக வதந்திகள் இருக்கின்றன. இது உண்மையாகவே இருந்தாலும் ஐ. நா. வில் செஞ்சீன இடம் பெற இன்னும் ஒரு பாதுகாப்புக் கௌன்ஸில் மெம்பர் நாடு செஞ்சீனவை அங்கீகரித்தாக வேண்டும்.

இத்தகராறு தீர்க்கப்படாவிட்டால் ஐ. நா. வில் இதுவரை ஏற்பட்டிராத அளவுக்கு மிகப்பெரிய நெருக்கடி ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

மூக்குக்கண்ணாடிகளை அபேஸ்செய்த ஆந்தை

லண்டன், மே. 2[illegible]—

லண்டனுக்கருகிலுள்ள ஈலிங் என்ற இடத்தில் ஸார் மூக்குக்கண்ணாடி போட்டுக்கொண்டு சென்றாலும் அவை ஒரு ஆந்தை வெடுக்கென்று கொத்தி சென்று விடுகிறதாம். இத்தொல்லை 7 நாட்களாகவும் நீடித்ததால் இதைப் பிடிக்க வழி ஏற்படுத்தப்பட்டு அப்படியே பிடிக்கப்பட்டது.

இது ஒரு சாதாரண ஆந்தைதான் என்றும் ஆனால் வைத்தியம் பிடித்ததென்றும் பின்னர் அறிவிக்கப்பட்டது. —ஜேனோப்

இக்காலத்தின் மேதாவி

ஆர்நாட்டாருக்கு நியூஜிலாந்து மந்திரி பாராட்டு

ஆக்லண்ட் மே. 22—

இக்காலத்தின் மேதாவிகளில் ஒருவர் இந்தியாவின் பிரதிநிதியான தோழர் ஏ. ராமஸ்வாமி முதலியார் என்றும் நல்ல நிபுத்திசாலிகளை கிழக்கு நாடுகள் வெஸ்ட்மினிஸ்டர் மகாநாட்டிற்கு அனுப்பியிருந்ததென்றும் நியூஜிலாந்து அயல்நாட்டு மந்திரி தோழர் டாமி ஜ் கூறினார். இலங்கை பிரதிநிதி தோழர் ஜயவர்த்தனாவையும் அவர் பாராட்டினார்.

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. தோழர்களுக்கு

செங்கற்பட்டு மாவட்டத்தில் மேலும் கிளைக் கழகங்கள் நிறுவவும், உறுப்பினர்கள் சேர்க்கவும், பிரசாரக் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தவும், மாவட்டக் கழகத்தினருடன் அனைவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் மாவட்டக் கமிட்டிக்கு இன்னும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்பாத கிளைக் கழகத்தினர் உடனே அதற்கான செய்தி தெரிவிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

கடிதம் எழுதுவோர் :—

சி. வி. எம். அண்ணாமலை
செயலாளர்
(செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க.)
பெரிய காஞ்சீபுரம்.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

இந்தியா - பாக் கூட்ஸ் பார்ஸல் போக்குவரத்து

சென்னை, மே 24—

இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு நேரிடையான கூட்ஸ் பார்ஸல் போக்குவரத்து மே 4ந் தேதி முதல் தற்காலிகமாக ஆரம்பமாகி நடந்துவருவதாக இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

இது சம்பந்தமான பிரச்னைகள் புதுடில்லியில் கூடும் கூட்டு செயலாளர் மாநாட்டில் விவாதித்து முடிவு செய்யப்படும்.

இந்தியாவிலுள்ள ரயில்வேக்கள் முன்னதாகவே கட்டணம் செலுத்திய பொருள்களை பாகிஸ்தானுக்கு அனுப்பலாம் என்றும், இப்போதைக்கு காய்கறி, பழங்கள், மீன், கோழிகள், முட்டை, பால், பால் சம்பந்தப்பட்ட பொருள்கள், வெற்றிலை இவைகள் மட்டுமே இப்போது அனுப்ப அனுமதிக்கப்படவேண்டும் என்று ரயில்வே போர்ட் உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

கடலுக்கடியிலுள்ள பூமிசத்திலிருந்து பெட்ரோலியம்

லண்டன், மே 22—

கடலுக்கடியிலுள்ள பூமிசத்திலிருந்து பெட்ரோலியம் கிடைக்கிறது என்று கூறப்படுவது சம்பந்தமாக ஆராய்ச்சியை நடத்திப் பார்க்க மூன்று கேம்பிரிட்ஜ் விஞ்ஞானிகள் மத்தியதரைகடல் பிரதேசத்திற்குச் சென்றிருக்கின்றனர்.

தேவை

நல்ல அனுபவமுள்ள "டிரெடில்மென்" ஒருவர் தேவை. அனுபவத்திற்கேற்ற ஊதியம் அளிக்கப்படும்.

மானேஜர் : "மாலைமணி"

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

25—5—50

பார்குளம்:—எம் எஸ். இராமசாமி.

26 - 5 - 50

கொற்கை:—எம் எஸ். இராமசாமி.

27 - 5 - 50

[illegible]மூர்:—சி பி. சிற்றரசு

28 - 5 - 50

கிருஷ்ணகிரி:—சி பி. சிற்றரசு.

★ நாட்டு நடப்பு ★

திருவள்ளுவர் வாசகசாலை

சேலம், மே 17—

14-5-50 காலை 9 மணிக்கு திருவள்ளுவர் வாசகசாலை சேலம்நகர் சுவாரத்தெருவில் 20 வது வார்டு கவுன்சிலர் தோழர் ஜனுப் டி. அப்துல்வாஜித் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, தலைவர் பின்னுரையுடன் நிகழ்ச்சி முடிவடைந்தது.

தோழியர் டி. டி. அனுருபா அவர்களைத் தலைவராக்கப்பட்டு, தலைவர் பேச்சுடன் அவ்விழா ஆரம்பிக்கப்பட்டது. தோழர் பா. சீனிவாசன் அவர்களால் வாசகசாலையின் தொடக்க அறிக்கை படிக்கப்பட்டது. பிறகு தோழர்கள் எஸ் எஸ். மகாதேவன், என். ஜி. வெங்கட்ராம் ஆகியோர் வாசகசாலையின் வளர்ச்சி, பொதுப்பு, அமைப்பு பற்றிப் பேசினார்கள். இனிப்பு, குளிர்ந்தபானம் வழங்கிய பிறகு இனிது கூட்டம் முடிந்தது.

ஸ. ஆ தி. மு. கழகம்

பம்பாய், மே 13—

11-5-50-ல் உறுப்பினர் கூட்டம் தாராவியில் தோழர் செந்திவேல் இல்லத்தில் நடைபெற்றது. கடந்த மாத வரவு-செலவு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

பின் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

தோழர் எஸ். ஆர். ஜெகநாதன் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் முத்தாயியம்மாள் இறந்ததைக் குறித்து அன்னார் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. குறிப்பாக நெல்லை ஜில்லாவில் பிரசவத்தின் காரணமாக அதிக மரணம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு சென்னை சர்க்கார் யாதொரு நடவடிக்கையும் எடுக்காதிருப்பதை வன்மையாக கண்டிக்கிறது. அவ்விதமரணத்தை உடனடியாக தடுப்பதற்கு ஆக நடவடிக்கை எடுக்கும்படி சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

மீன்பிடிப்போர் வாலிபர் சங்கம்

சென்னை, மே 20—

19-5-50 பகல் தேற்படி சங்கத் தலைவர் தோழர் எ. செல்வராசன், செயலாளர், தோழர் எம். வேதாசலம், தோழர் இ. கே. மாதவன் பி. ஏ., அவர்களோடு மீனவர்களின் உழைப்பைக் குறைத்து கலபமான முறையில் மீன்பிடிப்பதைக் குறித்து ஆலோசிக்கப்பட்டு, தற்சமயம் மீனவர்கள் உபயோகிக்கும் கட்டுமரத்திலேயே குறைந்த விலையில் கிடைக்கும் மோட்டார் (Out Ward Motar Engine) என்ஜினை உபயோகப்படுத்துவது என்றும் அம்முறையை அடுத்த வாரத்தில் பரிசோதித்துப் பார்ப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது. இம்முறை வெற்றி பெற்றால் சுலபமாக மீன் பிடிக்கவும், பிடித்த மீனை துரிதமாக கரையில் கொண்டுவந்து சேர்ப்பதற்கும் மிக மிக உதவியளிக்கும் என்று முடிவுசெய்யப்பட்டு, நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

தமிழர் நாடகமன்றம்

தஞ்சூர், மே, 16—

தோழர் முத்தையா. அவர்கள் இல்லத்தில் தோழர் அ. ரா. கோவிந்தன் தலைமையில் "தமிழர் நாடகமன்றம்" 13-5-50 இரவு 9 மணிக்கு ஏற்படுத்தப்பட்டு, விரைவில் ஒரு நாடகம் நடத்தவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. பிறகு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர், பொருளாளர் ஏ. முத்தையா, செயலாளர்: ஆறுமுகம், வி. உ. அ. சித்தி. மற்றும் ஏனைய செயற்குழுவினர் 5 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

க. உ. தொ. சங்கம்

ஈப்பைபூர், மே 18—

11-5-50 அன்று மில்லின் சாம்பவுண்டு மைதானத்தில் இராமநாதபுரம் ஜில்லா கருப்புக் கட்டித் தொழிலாளர் கிளைச் சங்கம் ஈரிப்பைபூரின் தோழர் டி. தர்மகர்த்தா அவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அவ்வமயம் தோழர் எஸ். மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை ரேஷன் கார்டு வழங்குவதில், கார்டு ஒன்றுக்கு எட்டணா முதல் ரூபாய் ஒன்று. இரண்டு வரையும் கட்டாய வரூல் செய்வதையும், இன்னும் அதிக விலைக்கு விற்பதற்காக கார்டுகளைப் பதுக்கிவைத்து மக்களை இதுவரை இரண்டு வார காலமாக ரேஷன் இல்லாது பட்டினி போட்டதையும் கண்டித்து முறையே தோழர்கள் ரேஸ்தய்யாத்துரை வி. ஷண்முகசுந்தரம், ஆர். எம். சுந்தரவேல் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

திருவள்ளுவர் கழகம்

மதுரை. மே. 14—

மதுரை 14-5-50 ஞாயிறு இரவு ஏழுமணிக்கு வடக்காடி வீதியிலுள்ள திருவள்ளுவர் கழக மன்றத்தில், உயர்திரு. மீ. கந்தசாமி புலவர் அவர்கள் தலைமையில் உறுப்பினர் பொதுக்கூட்டம் (ஜெனரல்பாடி) நடைபெற்றது. அதுபோது புதிய செயற்குழு அமைக்கப்பட்டது.

பீடித் தொழிலாளர் சங்கம்

பொள்ளாச்சி, ஏப். 16—

15-4-50 தேதி கோவை அசிஸ்டெண்டு லேபர் ஆபீசர் அவர்கள் பொள்ளாச்சிக்கு வந்து ஓமர் பீடிக்கம்பெனியிலிருந்து விலக்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வது பற்றி ஓமர்பீடிக் கம்பெனி முதலாளி தோழர் பி. ஏ. நசீர்பாபு அவர்களுடனும், சங்கத்தலைவர், தோழர்கள், பி. என். இராமசாமி. செயலாளர் என். காதர் பாட்சா ஆகியோர்களுடன் கலந்து விவாதித்தார். விவாதம் நடைபெற்ற பி. டபிள்யூ. டி. இன்ஸ்பெக்ஷன் பங்களாவில் ஏராளமான பீடித்தொழிலாளர்கள் குழுமியிருந்து விவாதத்தைக் கவனித்தனர். இறுதியில் வைக்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளுவதென்று முதலாளியினால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

நாளொன்றுக்குப் போர்ச்செலவு 10 லட்சம் பவுன்!

சைகோன், மே. 22—

இந்தோசீனாவில் பிரெஞ்சுப் படைகள் தம் ஆதிக்கத்தில் ஏராளமான பிரதேசங்களை வைத்துக்கொண்டிருப்பதால் செலவு அதிகமாக ஆகிறதென்றும், ஆனால் கஷ்டம் ஏதுமாக ஆகியிருக்கிறதென்றும் இந்த நெருக்கடியை தீர்க்கும். அமெரிக்க உதவி சீக்கிரம் கிடைக்கலாம் என்றும் குளோப் கிழுபர் கூறுகிறார்.

பிரெஞ்சுக்காரர்களிடம் மத்தாம் பசுவி ஆயுதங்கள் இருப்பதுடன் மாதம் 1000 பேர் வீதம் கொல்லப்பட்டோ காயமடைந்தோ வருகின்றனர் என்றும் அவர் கூறுகிறார்.

இந்தோசீனாவில் யுத்தம் நடத்த பிரான்ஸ் தினம் 10 லக்ஷம் பவுன் செலவழித்து வருகிறது என்று கூறப்படுகிறது.

தன் கொரில்லாப்போர் முறையினால் பிரெஞ்சுக்காரர்களை அவர்கள் ஸ்தானங்களிலிருந்து விரட்ட முடியவில்லை. என்பதை விட்டும் படை சேனாபதி ஹோசிமின் நன்கு அறிந்துகொண்டு ஹானோயில் போக்குவரத்தைப் பலப்படுத்துவதில் கவனம் செலுத்தி வருவதாக கிழுபர் கூறுகிறார்.

பம்பாயில் கலைவாணருக்கு வரவேற்பு

பம்பாய் மாதுங்கா தமிழ்ச் சங்கத்தாரால் அழைக்கப்பட்டிருக்கும் நகைச்சுவை அரசர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கும் தோழியர் மதுரம் அவர்களுக்கும் 14—5—50 ஞாயிறு காலை 8-30 மணிக்கு பம்பாய் தாராவி வாழ் பழந்தமிழர்கள் சார்பாக குட்டிவாடி மைதானத்தில் என்.எஸ்.கே. வரவேற்புக் குழுவினரால் ஓர் வரவேற்பு உபசாரம் அளிக்கப்பட்டது.

குட்டிவாடி மைதானம், வாழைகளாலும், பலவர்ண பூக்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒலிபெருக்கியுடன் அழகிய மேடை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. நகைச்சுவை அரசர் தாராவிக்கு வருகிறார் என்ற விளம்பரத்தைக் கண்ட பொதுமக்கள் காலை 7-மணியிலிருந்தே திரள்திரளாக வந்து மைதானத்தில் கூடினர். பல பெண்மணிகளும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

காலை 8-30 மணிக்கு வரவேற்புக் கழகத்தவரும் ஏனைய பிரமுகர்களும் கலைவாணர் — மதுரம் அம்மையார், புளிமூட்டை ராமசாமி அவர்களையும் மோட்டாரில் அழைத்து வர, கலைவாணர் வாழ்க எனும் வாழ்த்தொலிகளுடன் மேடைக்கு அழைத்துச்சென்றனர். வரவேற்புக் கழக முக்கியஸ்தர்கள் தோழர் கிருஷ்ணன் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.

பின்பு கூட்டுக் காரியதரிசி தோழர் எ. பாக்கியநாதன் அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி கூறிய பின் வரவேற்பு கழகத் தலைவர் தோழர் எஸ். டி. சவுரிதாசன் அவர்கள் கலைவாணர் குழுவினரை வரவேற்றுப்பேசினர்.

இறுதியாக தமிழ் சங்க செயலாளர் தோழர் முருகையா அவர்கள் சிறிது நேரம் பேசிய பின், தலைவர் அவர்கள் பழங்குடி மக்களின் விருப்பத்தை கலைவாணர் நிறைவேற்றிக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு முடிவுரைகூற, கூட்டுச் செயலாளர் தோழர் எ. பாக்கியநாதன் அவர்கள் நன்றி கூற 'கலைவாணர்' வாழ்க எனும் வாழ்த்தொலிகளுடன் கூட்டம் காலை 10-30 மணிக்கு இனிது கலைந்தது.

திருவனந்தபுரத்தில் திருக்குறள் வாசகசாலை

திருவனந்தபுரம், மே 17—

திருவனந்தபுரம், தி. மு. கழகத்தின் சார்பில் "திருக்குறள் வாசக சாலை" திறவ திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அன்பர்களின் ஆதரவு எதிர்பார்க்கப்படுகிறதென்றும் திருவனந்தபுரம் தி. மு. க. விளம்பர உறுப்பினர் தோழர் சண்முகம் அறிவிக்கிறார்.

கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

தீர்மானங்கள் அனுப்புவோர் கவனிக்க

கோவையில் நடைபெறும் முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டுக்குத் தீர்மானம் அனுப்பும் தோழர்கள் 25-5-50-க்குள் மாநாட்டு செயலாளர் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். தீர்மானங்களை பரிசிலனை செய்ய 26-5-50 தேதியன்று விஷயாலோசனை கமிட்டி கூட்டம் நடைபெறும். தீர்மானம் அனுப்பும் தோழர்கள் அக்கூட்டத்தில் கலந்துகொள்ளவும்.

சே. அ. ராசமாணிக்கம்
செயலாளர்

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

மே 27, 28 சனி ஞாயிறு கிழமைகளில்

கோவை நகர் ஆர். எஸ். புரம் உயர்நிலைப் பள்ளித் திடலில் அமைந்துள்ள

"வள்ளுவர் பந்தலில்"

★

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்

நாவலர் ச. சோமசுந்தரபாரதியார் எம். ஏ., பி. எல்.

மாநாட்டைத் திறந்துவைப்பார்

வ. க. தலைவர்:- தோழர் ஈ. வெ. கி. சம்பத்

★

இயல், இசை, கூத்து அரங்குகள் நடைபெறும்

கூத்து அரங்கில் :-

'சந்திரமோகன்' (27-5-50 இரவு) 'நீதிதேவன் மயக்கம்' (28-5-50 இரவு)

★

வரவேற்புறுப்பினர் நன்கொடை

கட்டணம் ரூ. 5—0—0

பிரதிநிதி .... ரூ. 2—0—0

மாநாட்டு வரவேற்புக் குழுவினர்.

அம்பாலாவில் புயல்

தந்திக் கம்பிகள் அறுந்தன மின்சார சப்ளை நின்றது

அம்பாலா, மே 21—

சென்ற வியாழக்கிழமையன்று இரவு அம்பாலாவில் அடித்த புயல் பயிர்களையும், வீடுகளையும் நாசப்படுத்திவிட்டது. ஆனால் இந்த மழை கரும்பு, பருத்தி பயிர்களுக்கு நன்மையளிக்கும். புயலால் நகருக்கருகில் உள்ள ராணுவ ஸ்தலத்தில் மின்சார சப்ளை நின்றுவிட்டது குடிதண்ணீர் கிடைப்பதும் நின்றுவிட்டது சுமார் 600 ராணுவ சிப்பாய்கள் தொடர்ந்து உழைத்து மின்சார சப்ளையையும், தண்ணீர் சப்ளையையும் பழைய நிலைமைக்குக் கொண்டு வந்தனர். தந்திக் கம்பிகளெல்லாம் அறுந்து விழுந்துவிட்டன. இதனால் பொதுமக்கள் அதிக நஷ்டமடைந்தனர். வெள்ளிக்கிழமையன்று மாலையில்தான தந்திக் கம்பிகள் சரியான நிலைமையில் பொருத்தப்பட்டன.

வெள்ளிக்கிழமையன்று மற்றொரு புயல் வீசியது இதனால் பானிப்பட் என்ற நகரில் தந்திக் கம்பங்கள் சாய்ந்துவிட்டன. டெல்லிக்கும், பஞ்சாபில் உள்ள தந்தி ஆபீஸ்களுக்கும் இடையே தொடர்பே இல்லாமல் போய்விட்டது. சனிக்கிழமையன்றுகாலை, தந்திபோக்குவரத்து மீண்டும் ஆரம்பமாயிற்று.

"நான் பவுத்தசன்யாசி ஆகப்போகிறேன்"

லண்டனில் பர்மா பிரதமர் தாகின்-நு அறிவிப்பு

லண்டன், மே 20—

ஜூலை மாதம் 10-ந் தேதிக்குள் பர்மாவில் அமைதி நிலவும் என்று, தாம் திடமாக நம்புவதாக பர்மா பிரதமர் தாகின்-நூ இன்று லண்டனில் கூறினர்.

பர்மாவில் பூரண அமைதி ஏற்பட்ட உடனே, தாம் பவுத்த சன்யாசியாக மாறப்போவதாக அவர் பத்திரிகை நிருபர்களிடம் கூறினர்.

தீ விபத்து

புகளூர், மே 18—

26-லட்ச ரூபாய் செலவில் மதராஸ் காண்டிராக்ட் கம்பெனியார் காண்ட்ராக்டு வேலை செய்து வரும் புகளூர்—வேலூர் காவேரி பாலம் கட்டும் வேலைக்காக சேகரம் செய்து தீத்த கொட்டகையில் வைக்கப்பட்டிருந்த சில வேலை செய்து முடிக்கப்பட்ட தேக்குமர சாமான்கள் இன்று பகல் 12 மணிக்கு தீப்பற்றி முற்றிலும் எரிந்து சாம்பலாகிவிட்டது.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street. Madras-1.